**செ.வெ.எண்:28** **நாள்:25.9.2021**

**செய்திக் குறிப்பு**

தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திடப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்ற அறிவிப்பு வெளியிடப்பெற்றுள்ளது.

இவ்வறிவிப்பின்படி 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாளையொட்டியும் நவம்பர் 14ஆம் நாள் ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளையொட்டியும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கல்லூரி, பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் தனித்தனியே பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுத்தொகைகள் வழங்கப்பெற தெரிவிக்கப்பெற்றுள்ளது.

இதன்படி மயிலாடுதுறை தியாகி நாராயணசுவாமி மேனிலைப் பள்ளியில் 02.10.2021 (சனிக்கிழமை) அன்று கல்லூரி / பள்ளி மாணவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெறும். போட்டிகளுக்கு கல்லூரி முதல்வர், பள்ளி தலைமையாசிரியர் அவர்தம் கல்லூரி / பள்ளி மாணவர்களிடையே போட்டி நடத்தி 2 பேர் வீதம் தெரிவு செய்து போட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசு ரூ.5000/- இரண்டாம் பரிசு ரூ.3000/- மூன்றாம் பரிசு ரூ.2000/- என்ற வகையில் வழங்கப்பெற

உள்ளன. இதேபோன்று கல்லூரி மாணவர்களுக்கும் மாவட்ட அளவில் முதல் பரிசு ரூ.5000/- இரண்டாம் பரிசு ரூ.3000/- மூன்றாம் பரிசு ரூ.2000/- என்ற வகையில் வழங்கப்பெற உள்ளன. மேலும் பள்ளி மாணவர்களுக்கென நடத்தப்பெறும் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுள் அரசுப் பள்ளி மாணவர்கள் இரண்டு பேரைத் தனியாகத் தெரிவு செய்து ஒவ்வொருவருக்கும் சிறப்புப் பரிசுத்தொகை ரூ.2000 வீதம் வழங்கப்பெறவும் உள்ளன. பள்ளிப் போட்டி காலை 10.00 மணிக்கும் கல்லூரிப் போட்டி பிற்பகல் 2 மணிக்கும் தொடங்கப்பெறும் எனவும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பள்ளி / கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.